

திருச்சியில் மறைந்த தொழிலதிபர் ராமஜெயத்தின் 63 ஆவது பிறந்தநாளையொட்டி அவரது வாழ்க்கை வரலாறு புத்தகம் மறு வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு, ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, தி.மு.க. துணை பொது செயலாளரும், திமுக மக்களவை கொறடாவுமான ஆ.ராசா எம்.பி., வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, காந்திராஜன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் பிரதீப் குமார், தொழிலதிபர் ரவிச்சந்திரன், இலக்கிய அணி செயலாளர் கவிச்சுடர் கவிதை பித்தன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்ட செயலாளர் காடுவெட்டி தியாகராஜன், மாநகராட்சி மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், நூல் ஆசிரியர் நந்தன், நகராட்சி ஆணையர் சரவணன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# திருச்சியில் தொழிலதிபர் கே.என்.ராமஜெயம் சிலைக்கு மாலை அணிவிப்பு!

## அமைச்சர்கள் – எம்.பி. – எம்.எல்.ஏ.க்கள் பங்கேற்பு!

திருச்சி, செப். 24 -

திருச்சி தொழிலதிபர் கே.என்.ராமஜெயத்தின் 63வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு அவரது உருவச் சிலைக்கு அமைச்சர்கள், எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு சகோதரரும், தொழிலதிபருமான கே.என்.ராமஜெயத்தின் 63 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி திண்டுக்கல் சாலையில் உள்ள கேர் கல்லூரி வளாகத்தில் உள்ள அவரது உருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

தொடர்ந்து ராமஜெயத்தின் வாழ்க்கை வரலாறு நூல் வெளியீட்டு விழா நடந்தது.

நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என். நேரு சகோதரரும், தொழிலதிபருமான ரவிச்சந்திரன், தி.மு.க.வின் துணைப் பொதுச் செயலாளரும் நீலகிரி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினருமான ஆ.ராசா, கூட்டுறவுத்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் சக்கரபாணி, வேளாண்மை துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, வடக்கு மாவட்டச் செயலாளர் காடுவெட்டி தியாகராஜன் எம்.எல்.ஏ., மாநகர மேயர் அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர் ஸ்டாலின் குமார், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் முத்துசெல்வம், மாவட்ட ஊராட்சி தலைவர் தர்மன் ராஜேந்திரன், சேர்மன் துரைராஜ், இளைஞர் அணி ஆனந்த், மாணவரணி பொறியாளர் ஆனந்த், ஒன்றியச் செயலாளர்கள் மாத்தூர் கருப்பையா, அந்தநல்லூர் கதிர்வேல், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் பி. ஆர்.சிங்காரம், பொதுக்குழு உறுப்பினர்கள் கிராப்பட்டி செல்வம் காஜாமலை விஜய் புத்தூர் தர்மராஜ், மண்டலக் குழுத் தலைவர்கள் விஜயலட்சுமி கண்ணன், துர்கா தேவி, பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ் ராம்குமார், கே.எஸ்.நாகராஜன், கமல் முஸ்தபா, வக்கீல் இளங்கோ, மணிவண்ண பாரதி கவியரசன், அந்தோணி, முன்னாள் பகுதிச் செயலாளர் தில்லைநகர் கண்ணன், மாநகர துணைச் செயலாளர், கவுன்சிலர் கலைச்செல்வி, அயூப்கான், டாக்டர் சுப்பையா பாண்டியன், தமிழரசி சுப்பையா, நவல்பட்டு விஜி, மண்டி சேகர், சோழன் சம்பத், வட்டச் செயலாளர் புத்தூர் பவுல்ராஜ், மாவட்ட விவசாய அணி அமைப்பாளர் ஜேசு அடைக்கலம், தென்னூர் அபூர்வமணி, எம்.ஆர்.எஸ். குமார், தென்னூர் ராஜ்குமார், துணை அமைப்பாளர் திருவரங்கம் ஜெயக்குமார், கவுன்சிலர்கள் ராமதாஸ், புஷ்பராஜ், சுபா, மஞ்சுளா தேவி, வட்டச் செயலாளர்கள் பி. ஆர். பால சுப்பிரமணியன், ராம்தாஸ் மூவேந்திரன், பந்தல் எஸ்.ராமு, மிளகுபாறை சிவா, அரவானூர் தர்மராஜன், வாமடம் சுரேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.



இராமநாதபுரம் நாடாளுமன்றத் தொகுதியில் ‘இந்திய’ கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்ற நவாஸ்கனி புதுக்கோட்டை தெற்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமையில் மணமேல்குடி வடக்கு ஒன்றியப் பகுதிகளுக்கு உட்பட்ட கட்டுமாவடி, கிருஷ்ணாஜி பட்டினம், காரக்கோட்டை, தினையாகுடி, பிராமணவயல், இடையாத்தூர், நிலையூர், பெருமருதூர், கரகத்திக்கோட்டை, மணலூர், வெள்ளூர், தண்டலை, நெல்வேலி, இடையாத்திமங்கலம், மும்பாலை பட்டங்காடு, மணமேல்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்து உரையாற்றினார். நிகழ்வுகளில் ஒன்றியச் செயலாளர் சக்தி ராமசாமி, தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே.கலைமணி, க.ராஜேந்திரன், பொன் கணேசன், சுப்பிரமணியன், ஒன்றிய காங்கிரஸ் தலைவர் சரவணன், த.மணி ராஜன், தி.முத்து, விமலாதி ராஜன், ரம்யா பாலு, வீரப்பன், மாலதி கணேசன், சக்திவேல், சாதிக், ம கணேசன், குமரேசன், முருகன், செந்தில்வேலன், களஞ்சியம் முஹம்மது நலீம், ரமேஷ், செந்தில்வேலன், குதுபுதீன், நாகராஜன், கூத்தையா, லீமா ஜோதி, அடைக்கலராஜா, மாரிமுத்து, வினோத், குமார் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## செஞ்சிக்கோட்டைக்கு யுனெஸ்கோ குழுவினரின் வருகை

# உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்பு நிகழ்ச்சி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

செஞ்சி, செப் 24 -

விழுப்புரம் மாவட்டதில் செஞ்சிக்கோட்டை சுற்றுலாத்தலமாக உள்ளது.

செஞ்சிக்கோட்டையை உலக பாரம்பரிய நினைவு சின்னமாக அறிவிக்க வேண்டும் என ஒன்றிய அரசு யுனெஸ்கோவிற்கு பரிந்துரை செய்துள்ளது.

இதன் அடிப்படையில் இம்மாதம் 27ஆம் தேதி யுனெஸ்கோ குழுவினர் செஞ்சிக்கோட்டையை ஆய்வு செய்ய வரவுள்ளனர் இதற்கு முன்பாக பள்ளி கல்லூரி மாணவர்கள் பங்கேற்கும் பாரம்பரிய நடை 2024 விழா நடத்தி மாணவர்களை செஞ்சிக்கோட்டையை பார்வையிட செய்து அவர்களின் கருத்துக்களையும், அனுபவங்களையும் பதிவு செய்தும்,

பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் கருத்து கேட்பு நிகழ்ச்சியை பதிவு செய்து இந்த தொகுப்பை யுனெஸ்கோ குழுவினருக்கு காண்பிக்கவுள்ளனர்.

இதற்கான மூன்று நாள் பாரம்பரிய நடை 2024 விழாகடந்த 18ஆம் தேதி தொடங்கி நேற்று நிறைவு பெற்றது.

இதைத் தொடர்ந்து பொதுமக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் கருத்துக் கேட்பு நிகழ்ச்சி செஞ்சி கோட்டையில் நடைபெற்றது.

விழுப்புரம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பழனி தலைமை தாங்கினார். ஆரணி எம்.பி. தரணிவேந்தன் முன்னிலை வகித்தார்.

கூடுதல் ஆட்சியர் ஸ்ருதன் ஜெய்நாராயணன் அனைவரும் வரவேற்றார்.

தொல்லியல் மற்றும் வரலாற்று துறையைச் சார்ந்த வல்லுநர்கள் கௌரி பிரதீப் சக்கரவர்த்தி, பேராசிரியர் ரமேஷ், நூல் ஆசிரியர் நடராஜன் ஆகியோர் செஞ்சிக் கோட்டையின் வரலாற்றை எடுத்துரைத்தனர்.

நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றிசெஞ்சிக் கோட்டையின் வரலாற்று புத்தகத்தை வழங்கினார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் சேகர், விழுப்புரம் மாவட்டம் முதன்மை கல்வி அலுவலர் அறிவழகன்,ஒன்றிய பெருந்தலைவர்கள் விஜயகுமார், கண்மணி நெறிஞ்செழியன், அமுதா ரவிக்குமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான், துணைச் சேர்மன் ஜெயபாலன், மேல்மலையனூர் கிழக்கு ஒன்றிய செயலாளர் நெடுஞ்செழியன், செஞ்சி மேற்கொண்டிய செயலாளர் பச்சையப்பன், மாவட்டக் கவுன்சிலர்கள் அரங்க ஏழுமலை, சாந்தி சுப்பிரமணியன், செல்வி ராம சரவணன், அன்பு செழியன், செஞ்சி பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் ராஜலட்சுமி செயல்மணி உள்ளிட்ட உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள், பொது மக்கள் பள்ளி மாணவ மாணவிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

செஞ்சி வட்டாட்சியர் ஏழுமலை நன்றி கூறினார்.

## ஒன்றியக் கழகச் செயலாளர் வட்டூர் கந்தவேல் ஏற்பாட்டில் – நாமக்கல் மேற்கு மாவட்டம்

# திருச்செங்கோடு அ.தி.மு.க.வினர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்!

நாமக்கல், செப். 24-

நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திருச்செங்கோடு அ.தி.மு.க. (ஓ.பி.எஸ். அணி) தெற்கு ஒன்றியச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி மற்றும் அ.ம.மு.க.வைச் சேர்ந்த திருச்செங்கோடு தெற்கு ஒன்றிய செயலாளர் முருகேசன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பிரபு ஆகியோர் தலைமையில் 14 பெண்கள் உட்பட 112 பேர் திருச்செங்கோடு ஒன்றிய தி.மு.க. செயலாளர் வட்டூர் தங்கவேல் ஏற்பாட்டில் தி.மு.க.வில் இணைந்தனர்.

புதிதாக தி.மு.க.வில் இணைந்தவர்களை வரவேற்று சால்வை அணிவித்து மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வாழ்த்துத் தெரிவித்தார். திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் அனைத்தும் பொதுமக்களிடம் கொண்டு சேர்த்து, கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் ஆணைப்படி வருகின்ற 2026 சட்டமன்றத் தேர்தலில், தீவிர களப்பணி ஆற்ற வேண்டும் எனவும் கழகத்தில் இணைந்தவர்களிடம் மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் கேட்டுக்கொண்டார்.

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில்

# நாமக்கல் மேற்கு மாவட்ட மாணவர் அணி நேர்காணல்!

## அமைச்சர் மா.மதிவேந்தன் – எஸ்.மோகன் பங்கேற்பு!

நாமக்கல், செப். 23 -

நாமக்கல் மேற்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி நேர்காணல் மற்றும் ஆலோசனைக் கூட்டம் கழக மாணவர் அணி செயலாளர் சி.வி.எம்.பி.எழிலரசன் எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட பரமத்தி வேலூர், திருச்செங்கோடு, குமாரபாளையம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் மாணவர் அணி அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்கள் நேர்காணல் மற்றும் கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றம் அமைக்க ஆலோசனைக் கூட்டம் மதியம் 1.00 மணி அளவில் நாமக்கல் மேற்கு மாவட்ட கழக அலுவலகம், திருச்செங்கோடு, வேலூர் ரோடு, தளபதியார் அரங்கில் மாவட்ட கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாநில மாணவர் அணி இணைச் செயலாளர் எஸ்.மோகன், துணைச் செயலாளர்கள் சேலம்.ரா.தமிழரசன், கா. பொன்ராஜ், வி.ஜி.கோகுல், கா. அமுதரசன், பி. எம். ஆனந்த் ஆகியோர்கள் முன்னிலையில் நேர்காணல் நடைபெற்றது.

இதில் வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். நேர்காணலில் 200க்கும் மேற்பட்ட இளைஞர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்.

மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பாலசுப்ரமணியம் துணை அமைப்பாளர்கள் ஐயப்பன் (எ) பெருமாள் தங்கமணி, ராகேஷ் கண்ணன், லாவண்யா மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! “வயநாடு நிலச்சரிவு பேரிடருக்கு, இதுவரை ஒன்றிய பா.ஜ.க. அரசு, எந்தவித நிதி உதவியும் செய்யவில்லை” என்று கேரள மாநில முதல்வர் பினராயி விஜயன் தனது மனக் குமுறலை வெளிப்படுத்தி இருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம்பா! வயநாடு பேரிடருக்கு நிதி உதவி செய்வதால் பா.ஜ.க.வுக்கு அரசியல் ரீதியாக என்ன லாபம் ஏற்பட்டுவிடப் போகிறது ?**

**எந்தக் காலத்திலும் காவி அங்கே கரைசேரப் போவதில்லை; தாமரை அங்கே மலரப் போவதில்லை !**

**வயநாடு என்றாலே, பா.ஜ.க.வைப் பொருத்தவரை “ பய நாடு ” தானே !**




புதுக்கோட்டை மாவட்டம் கறம்பக்குடி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைபெற்ற ஆறாவது பட்டமளிப்பு விழாவில் சுற்றுச்சூழல் துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்துகொண்டு பட்டப் படிப்பை நிறைவு செய்த மாணவ – மாணவிகளுக்கு பட்டங்கள் வழங்கி விழாப் பேருரை நிகழ்த்தினார். இவ்விழாவில் கந்தர்வகோட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் எம்.சின்னதுரை, கல்லூரி முதல்வர், பேராசிரியர்கள், அலுவலக பணியாளர்கள் மற்றும் மாணவ, மாணவிகள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.




நாமக்கல் மேற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் திருச்செங்கோடு அ.தி.மு.க. (ஓ.பி.எஸ். அணி) தெற்கு ஒன்றியச் செயலாளர் ஈஸ்வரமூர்த்தி மற்றும் அ.ம.மு.க.வைச் சேர்ந்த திருச்செங்கோடு தெற்கு ஒன்றியச் செயலாளர் முருகேசன், வடக்கு ஒன்றியச் செயலாளர் பிரபு ஆகியோர் தலைமையில் 14 பெண்கள் உட்பட 112 பேர் திருச்செங்கோடு ஒன்றியச் செயலாளர் வட்டூர் தங்கவேல் ஏற்பாட்டில் தி.மு.க.வில் இணைந்தனர். புதிதாக தி.மு.க.வில் இணைந்தவர்களை வரவேற்று சால்வை அணிவித்து மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் வாழ்த்துத் தெரிவித்தார்.